# கட்டாயத் திருமணத்திற்கான குடிமக்கள் (சிவில்) பாதுகாப்புகளையும் பரிகாரங்களையும் மேம்படுத்துதல்

ஆலோசனைப் பத்திரம் – சுருக்கப் பதிப்பு

ஜூலை 2024

# நாட்டின் அங்கீகாரம்

*நாங்கள் ஆஸ்திரேலிய நாட்டின் பாரம்பரிய பாதுகாவலர்களை ஏற்றுக்கொள்கிறோம், நிலம், கடல் மற்றும் சமூகத்துடன் அவர்களது தொடர்ச்சியான இணைப்பினை ஏற்றுக்கொள்கிறோம். மக்களுக்கும், கலாசாரத்திற்கும் மற்றும் காலம்சென்ற முதியோருக்கும், தற்போது வாழ்ந்துகொண்டிருப்போருக்கும் மற்றும் இனிமேல் வரவிருப்போருக்கும் நாம் எமது மரியாதையைச் செலுத்துகிறோம்.*

© Commonwealth of Australia 2024

பொதுநலவாய Coat of Arms (மரபுச்சின்னங்கள் பொருந்திய அங்கி)-ஐத் தவிர, இந்த வெளியீட்டில் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து சாதனங்களும், https://creativecommons.org/licenses/by/4.0/legalcode -இல் உள்ள Creative Commons Attribution 4.0 International Public License-இன்கீழ் வழங்கப்படுகிறது.

இதன் அர்த்தம் என்னவென்றால் இந்த உரிமம் (license) இந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டது போல இருக்கும் சாதனங்களுக்கு மாத்திரமே பொருந்தும்

இத்துடன் தொடர்புடைய உரிமத்தின் நிபந்தனைகளின் விபரங்கள் https://creativecommons.org/ as is the full legal code for the CC BY 4.0 license at https://creativecommons.org/licenses/by/4.0/legalcode-இல் இருக்கும் Creative Commons website-எனும் இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

Use of the Coat of Arms
எவ்வித நிபந்தனைகளின்கீழ் இந்த Coat of Arms பாவிக்கப்படலாம் என்பது பற்றிய விபரங்கள் பின்வரும் இணையத்தளத்தில் கிடைக்கும்
பிரதம மந்திரி மற்றும் மந்திரிசபை திணைக்கள இணையத்தளம்- https://www.pmc.gov.au/government/commonwealth-coat-arms.

# உதவியும் ஆதரவும்

உங்களுடைய பாதுகாப்பு, இன்னொரு ஆளின் பாதுகாப்பு, அல்லது ஓர் அவசரநிலை போன்றவை உங்களுக்கு ஏற்பட்டால், தொலைபேசியில் மூன்று பூச்சியத்தை (000) அழைக்கவும்.

நீங்களோ அல்லது உங்களுக்குத் தெரிந்த யாரோஒருவர் கட்டாயத்திருமணத்தில் அல்லது அதன் பயத்தில் இருந்தால், நீங்கள் ஆஸ்திரேலியன்ஃபெடரல் பொலிசுக்கு அறிவிக்கலாம், அல்லது 131 237அழைத்து, அல்லது அவர்களது இணையத்தளத்தினூடாக அல்லது (திங்கள் – வெள்ளி காலை 9 மணியிலிருந்து மாலை 5 மணிவரை, சிட்னி நேரம்) 02 9514 8115-ஐ அழைத்து My Blue Sky – ஐத் தொடர்புகொள்ளலாம் My Blue Sky என்பது, கட்டாயத்திருமணத்தில் இருக்கும் அல்லது திருமணம் செய்யுமாறு கட்டாயப்படுத்துவது குறித்துக் கவலையில் இருக்கும் ஆஸ்திரேலிய மக்களுக்கான தேசிய சேவையாகும்

உதவி மற்றும் ஆதரவு போன்றவற்றைப் பின்வரும் சேவைகள்கூட உங்களுக்கு வழங்கலாம்:

- Lifeline (13 11 14) – தேசிய நெருக்கடி ஆதரவுகள் மற்றும் தற்கொலை தடுப்பு சேவைகள் நாளொன்றில் 24 மணி நேரமும், வாரத்தில் 7 நாட்களும் கிடைக்கும்.
- 1800Respect (1800 737 732) - தேசிய பாலியல் தாக்குதல், வீட்டு மற்றும் குடும்ப வன்செயல் தொடர்பான ஆலோசனை சேவை போன்றவை நாளொன்றில் 24 மணி நேரமும், வாரத்தில் 7 நாட்களும் கிடைக்கும்
- 13YARN (13 92 76) என்பது பழங்குடியினர் மற்றும் ரொறெஸ் நீரிணை தீவைச் சேர்ந்தோருக்கான நெருக்கடி ஆதரவு இணைப்பாகும், இது நாளொன்றில் 24 மணி நேரமும், வாரத்தில் 7 நாட்களும் கிடைக்கும்
- Kids Helpline (1800 55 1800) – ( 5 முதல் 25 வயதுடைய)குழந்தைகளுக்கும், இளைஞர்களுக்குமாக உருவாக்கப்பட்ட தேசிய நெருக்கடி ஆதரவுசேவையை நாளொன்றில் 24 மணி நேரமும் வாரத்தில் 7 நாட்களும் பெற்றுக்கொள்ளலாம்.

# சமர்ப்பணம் ஒன்றினைத் தயாரித்தல

இந்த ஆலோசனைப் பத்திரத்திற்குப் பதிலாக ஒரு சமர்ப்பணத்தை வழங்குவதற்கு, Commonwealth Attorney-General's Department's Consultation Hub -ஐப் பார்த்து 'Make a submission' என்பதை அழுத்தவும். இந்தப் பத்திரத்தி அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள கலந்தாலோசனக்கேள்விகளுடன் மெய்நிகர் (ஆன்லைன்) கருத்துக்கணிப்பிற்கு உங்களை இது அழைத்துச் செல்லும்.

ஒவ்வொரு கேள்விகளுக்கும் நீங்கள் பதிலளிக்க வேண்டியதில்லை. கலந்தாலோசனை மையத்தினூடாக தனிப்பட்ட சமர்ப்பித்தலையும் நீங்கள் பதிவேற்றம் செய்யலாம்

உங்களின் பதில்களை உங்களின் பெயரைக் குறிப்பிட்டு அல்லது பெயரைக்குறிப்பிடாமல் நீங்கள் சமர்ப்பிக்கலாம். நீங்கள் சம்மதத்தை வழங்கினால், கலந்தாலோசனைக்கான காலம் முடிந்ததும் பதில்களை நாங்கள் வெளியிடுவோம். நீங்கள் சம்மதிக்காதுவிட்டால், அல்லது இந்தச் சமர்ப்பணத்தை வெளியிடுவதில் ஏதேனும் சட்டப்பிரச்சினைகள் உருவாகுமெனில், பதில்களை நாங்கள் வெளியிடமாட்டோம். தகவல் சுதந்திர கோரிக்கைகள் அல்லது பாராளுமன்ற கோரிக்கைகளுக்கு அமைவாகச் சமர்ப்பணங்கள் இருக்கலாம்.

கலந்தாலோசனை நடைமுறையூடாகப் பகிர்ந்துகொள்ளப்பட்ட சொந்தத் தகவல்கள், தனிஉரிமைச் சட்டத்தின் பிரகாரம் (*Privacy Act 1988* (Cth)) மேற்கொள்ளப்படும் சட்டமாஅதிபர் திணைக்களம் எவ்வாறு தனிப்பட்டவர்களின் தகவல்களைச் சேகரிக்கிறது, சேமித்துவைக்கிறது அத்துடன் பயன்படுத்துகிறது என்பது குறித்து மேலதிகதகவல்களைப் பெற்றுக்கொள்ள, தயவுசெய்து Attorney-General's Department's Privacy Policy-ஐப் பாருங்கள்.

### *பிற கலந்தாலோசனை வழிமுறைகள்*

நேரடியாக அல்லது காணொளி (வீடியோ) அல்லது தொலைபேசியில் உங்களின் கருத்தைக் கூற நீங்கள் விரும்பினால், வேறேதும் அணுகக்கூடிய தேவைகள் இருந்தால் அல்லது ஆங்கிலம் அல்லாத வேறு மொழியில் உங்களின் கருத்தை நீங்கள் வழங்க விரும்பினால், ForcedMarriage@ag.gov.au-ஐத் தொடர்புகொள்ளவும்.

## ஆலோசனை காலம்

29/07/2024 -ஆலோசனை ஆரம்பித்து, 23/09/2024-இல் முடிவடையும்.

## விசாரணைகள்

உங்களின் கருத்துகள் குறித்துக் கலந்துரையாட நீங்கள் விரும்பினால், தயவுசெய்து ForcedMarriage@ag.gov.au-ஐத் தொடர்புகொள்ளவும்.

# அறிமுகம்

ஆஸ்திரேலியாவிலிருக்கும் ஒவ்வொருவரும் யாரை, எப்போது திருமணம் செய்யவேண்டுமென்பதை தாமாகவே சுதந்திரமாகத் தெரிவுசெய்யலாம். ஒருவர் விரும்பாதபோது அவருக்குத் திருமணம் செய்துவைப்பது ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாததாகும் என்பதுடன் ஆஸ்திரேலியாவில் இது ஒரு குற்றமாகும்.

சுதந்திரமாகவும், முழுமையாகச் சம்மதம் இல்லாமலும் ஒருவர் திருமணம் செய்யும்போது கட்டாயத்திருமணம் இடம்பெறுகிறது. பலவந்தப்படுத்துதல், பயமுறுத்துதல் அல்லது ஏமாற்றுதல்,போன்றவற்றால் அல்லது 16 வயதிற்கு உட்பட்டவராக இருக்கும்போது இது இடம் பெறலாம். இது எந்தவொரு நபருக்கும் நடக்கலாம், ஆனால் இளம் பெண்கள் மற்றும் சிறுமிகள் மிகவும் ஆபத்தில் இருக்கிறார்கள்

கட்டாயத்திருமணத்திற்கான நாட்டுமக்களின் பிரதிபலிப்பை மேம்படுத்துவதற்கு, விருப்பத்தேர்வுகளை ஆஸ்திரேலிய அரசாங்கம் பரிசீலனைக்கு எடுத்துள்ளது, இதில் பின்வருவன அடங்கும்:

- குடும்ப மற்றும் வீட்டு வன்செயல் சேவைகளை அணுகுவதற்கு பாதிக்கப்பட்ட-உயிர்பிழைத்தோர் மேம்பாட்டிற்காக குடும்ப மற்றும் வீட்டு வன்செயலின் ஒரு வடிவமாகக் கட்டாயத் திருமணம் குறித்த பகிரப்பட்ட புரிந்துகொள்ளும் ஆற்றலைக் கட்டிவளர்த்தல்
- ஆரம்பத்திலேயே அடையாளம் காணுதல், தலையிடுதல் மற்றும் தடுத்தல் போன்றவற்றிற்கு ஆதரவளிப்பதற்கு கல்வி மற்றும் விழிப்புணர்வு-தூண்டுதலை மேம்படுத்துதல், அத்துடன்
- கட்டாயத் திருமணம் குறித்த ஆபத்திலுள்ள அல்லது ஆபத்துக்குள்ளான மக்களுக்கு குடிமக்கள் (சிவில்) பாதுகாப்புகள் மற்றும் கிடைக்கக்கூடிய பரிகாரங்களைப் வலுப்படுத்துதல்.

சமூகத்தின் தேவைகளை இந்த வேலைகள் பூர்த்திசெய்வதை நிச்சயப்படுத்துவதற்கு ஆஸ்திரேலிய மக்களின் உள்ளீடு முக்கியமாகும்.

பொது அரசாங்கம், மாநிலம் அல்லது பிரதேச அரசாங்கங்கள் போன்றவை இணங்கிக்கொண்ட கருத்துகள் இந்தப் அறிக்கையில் விபரிக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளைப் பிரதிநிதித்துவம் செய்யாது.

## தற்போதுள்ள பிரதிபலிப்பு

கட்டாயத் திருமணத்திற்கான ஆஸ்திரேலிய அரசாங்கத்தின் பிரதிபலிப்பு நவீன அடிமைத்தனத்தை எத்திர்துப் போரிடுவதற்கான தேசிய செயல் திட்டம் 2020 – 2025-இல் விபரிக்கப்பட்டுள்ளது கட்டாயத்திருமணத்தில், அல்லது அதன் ஆபத்தில் இருக்கும் மக்களுக்கான குடிமக்கள் (சிவில்) பாதுகாப்பு மற்றும், பரிகாரங்களை மேம்படுத்துவதற்கு ஒரு மாதிரியை உருவாக்க தேசிய செயல் திட்டம் ஒரு அர்ப்பணிப்பை உள்ளடக்குகிறது.

கட்டாயத்திருமணத்தைக் குற்றமாக்கும் சட்டவிரோத செயல்களை குற்றவியல் சட்டக் கோவை (*Criminal Code* (Cth) ) கொண்டுள்ளது 2013 இல் இவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன கட்டாயத்திருமணம் ஒன்றிற்கு ஒருவரை கட்டாயப்படுத்தி உட்படுத்துதல் மற்றும்/அல்லது ஒரு தரப்பினராக இருத்தல், சட்டவிரோதமாகும். நீங்களே கட்டாயத்திருமணத்தினால் பாதிக்கப்பட்டவராக இருக்காதுவிட்டால், கட்டாயத்திருமணத்திற்கு ஒரு தரப்பினராக இருப்பதானது, கட்டாயத்திருமணத்தினால் பாதிக்கப்பட்டவரென நீங்கள் அறிந்த அல்லது சந்தேகிக்கும் ஒரு நபரை திருமணம் செய்ய இணங்குவதாகும்.

கடத்தப்பட்ட ஆட்களுக்கான ஆஸ்திரேலிய அரசாங்க நிதியுதவித் திட்டத்தினூடாக (STPP) ஆஸ்திரேலிய செஞ்சிலுவைச் சங்கம் வழங்கும் இந்த உதவியைப் பெற்றுக்கொள்ளலாம். கட்டாயத்திருமணத்தில் அல்லது அதன் ஆபத்தில் இருக்கும் மக்களுக்கு 200 நாட்கள் வரை மிகவும் பயனுள்ள ஆதரவினை STPP வழங்குகிறது. தேசிய கட்டாயத் திருமண திட்டம் எனப்படும் புதிய கட்டாயத்திருமண நிபுணர் உதவித் திட்டம் ((FMSSP) ஒன்றினை நிறுவுவதற்கு 5 ஆண்டுகளுக்கு மேலாக ஆஸ்திரேலிய அரசாங்கம் $12.1 மில்லியன்களை வழங்கவும் இணங்கியுள்ளது. தேசிய கட்டாயத் திருமணதிட்டம் எனப்படும் இந்தத் திட்டம் ஜனவரி 2025 இல் ஆரம்பிக்கப்படவுள்ளது. கட்டாயத்திருமணத்தில் அல்லது அதன் ஆபத்தில் இருக்கும் மக்களுக்குத் தனிப்பட்ட ஆதரவினை FMSSP வழங்கும். உடல் நலம், நல்வாழ்வு மற்றும் சமூக ஆதரவு போன்றவற்றில் கவனத்தைச் செலுத்தும் தனிப்பட்டோரின் பல்வேறுபட்ட தேவைகளுக்கு இந்த அமைப்பு உதவி வழங்கும். உளநல ஆறுதல் ஆலோசனை மற்றும் தேவை ஏற்படின் அவசரகால தங்குமிடவசதி போன்ற முக்கிய சேவைகள் இதில் உள்ளடங்கும்.

## ஆலோசனைக்கான முன்மொழிவுகள்

### 1. குடும்ப மற்றும் வீட்டு வன்செயல் சேவைகளை, பாதிக்கப்பட்ட-உயிர்பிழைத்தோர் அணுகுவதற்கான வழிகளை மேம்படுத்துவதற்கு,குடும்ப மற்றும் வீட்டு வன்முறையின் ஒரு வடிவமாகக் கட்டாயத் திருமணம் குறித்த பகிரந்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வுகளைக் கட்டியெழுப்புதல்

கட்டாயத்திருமணம் பொதுவாக குடும்ப சூழலில்தான் இடம்பெறுகிறது ஆயினும், ஆஸ்திரேலியா முழுவதும், குடும்ப மற்றும் வீட்டு வன்முறையின் ஒரு வடிவமாக கட்டாயத்திருமணத்தை அங்கீகரிப்பது மாறுபடுகிறது.

கட்டாயத்திருமணத்தால் பாதிக்கப்பட்ட-உயிர்பிழைத்தோருக்குப் பயனளிக்கக்கூடிய பாதுகாப்புகள், உதவிகள் குடும்ப மற்றும் வீட்டு வன்முறை கட்டமைப்புக்குள் அடங்குகிறது. குடிமக்கள் பாதுகாப்பு கட்டளைகள், சட்ட உதவி, மருத்துவ பராமரிப்பு, உளநல ஆலோசனை, நிதியுதவி மற்றும் அவசரகால தங்குமிடவசதி போன்றவை இதனுள் அடங்கும். ஆயினும், கட்டாயத்திருமணத்தை அடையாளம் காணுவதில் ஒரு சீரற்ற தன்மை இருக்குமானால் இத்தகைய பாதுகாப்புகள் மற்றும் உதவிகளுக்கான வழிகளை, குடும்ப மற்றும் வீட்டு வன்செயலின் ஒரு வடிவம் என்றவகையில், கட்டுப்படுத்தும். ஏனெனில், கட்டாயத்திருமணத்தில் அல்லது அதன் ஆபத்தில் இருக்கும் மக்களுக்கு இத்தகைய சேவைகள் கிடைக்காமல் போகலாம் அல்லது இது குடும்ப அல்லது வீட்டு வன்முறையின் ஒரு வடிவம் என்றவகையில் கட்டாயத்திருமணம் குறித்த விழிப்புணர்வு அல்லது அறிவு இல்லாமை இதற்கான காரணமாகலாம்.

அதிகார வரம்பினைப்பொறுத்து, குடும்ப மற்றும் வீட்டு வன்முறையின் ஒரு வடிவமாக கட்டாயத்திருமணம் பற்றிய ஒரு பகிரப்பட்ட புரிந்துணர்தலைப் பின்வரும் வழிகளில் பெறலாம்:

- கட்டாயத்திருமணம் உட்பட வெளிப்படையாக குடும்ப மற்றும் வீட்டு வன்முறை குறித்த வரையறைகளில்
- பொருத்தமான வேளைகளில், குடும்ப மற்றும் வீட்டு வன்முறை வரையறைகளில் ஏற்கனவே கட்டாயத்திருமணம் குறிப்பிடப்பட்டிருப்பதை தெளிவுபடுத்துதல்
- குடும்ப மற்றும் வீட்டு வன்முறையின் ஒரு வடிவமாக அதிகளவில் ஒத்திருப்பதை அடையாளம்கண்டு உறுதிசெய்ய கல்வி மற்றும் விழிப்புணர்வை-தூண்டும் நடவடிக்கைகளை மேம்படுத்துதல்
- ஒருவரை கல்லாயாணம்செய்யுமாறு கட்டாயப்படுத்தும் நோக்கத்திற்காக வற்புறுத்துதல், பயமுறுத்துதல், அத்துடன் ஏமாற்றுதல் அடங்கலாக, கட்டாய திருமணம் வரைக்கும் இட்டுச்செல்லும் நடவடிக்கைக்குப் பிரயோகிகிக்கப்படக்கூடிய குடும்பம் மற்றும் வீட்டு வன்செயல் போன்றவற்றின் வரையறைகளை நிச்சயப்படுத்துதல்

## 2. கல்வி மற்றும் விழிப்புணர்வு-தூண்டுதலை அதிகரித்தல்

அதிகரிக்கப்பட்ட கட்டாயத்திருமண குடிமக்கள் (சிவில்) பாதுகாப்புகள் மற்றும் பரிகாரங்கள் முழுமையான ஒருங்கிணைந்த பதில் ஒன்றின் பகுதியாகுமென நிச்சயப்படுத்துவதன் முக்கியத்துவத்தை பங்குதாரர்கள் வலியுறுத்தியுள்ளார்கள். சமூகக் கல்வி மற்றும் விழிப்புணர்வு-தூண்டுதல், அதேபோல முன்னணியில் பதிலளிப்போருக்கான பயிற்சி போன்றவை இதில் அடங்கும். ஆதரவுதேடும ் மக்களின் எண்ணிக்கையை, கல்வி மற்றும் விழிப்புணர்பு-தூண்டுதல் அதிகரிக்கலாம், ஆதலால், பொருத்தமான ஆதரவு சேவைகளுடன் இணந்து செயற்படுவது அவசியமாகும்.

கலாசாரரீதியாகப் பொருத்தமானதாகவும், கட்டாயத்திருமணத்தால் பாதிக்கப்பட்ட சமூகத்தினருடன் மேம்படுத்தப்பட்ட புதியதொரு கல்வி மற்றும் விழிப்புணர்வு-எழுச்சிபெறும் நடவடிக்கைகள் தேவையாகும்.

புதிய கல்வி மற்றும் விழிப்புணர்வை- தூண்டும் நடவடிக்கைகள் பின்வருவனவற்றை உள்ளடக்கலாம்:

- கலாசாரரீதியாகப் பொருத்தமுடைய, அணுகக்கூடிய மற்றும் அதிர்ச்சி-தகவலறிந்த பதில்கள் உட்பட கட்டாய திருமண அறிகுறிகள் குறித்து எவ்வாறு பதிலளிப்பது என்பது அடங்கலாக இலக்குவைக்கப்பட்ட விழிப்புணர்வு- தூண்டல்.
- சமூகக் கல்வி மற்றும் விழிப்புணர்வு-தூண்டல் மற்றும்
- குடும்ப மற்றும் வீட்டு வன்முறை சேவை வழங்குபவர்கள் உட்பட இலக்குவைக்கப்பட்ட விழிப்புணர்வு- தூண்டல் அத்துடன் முன்னரங்க பதிலளிப்போருக்கான கல்வி.

## 3. குடிமக்கள் (சிவில்) பாதுகாப்புகள் மற்றும் பரிகாரங்கள் போன்றவற்றை வலுவூட்டல்

தற்போது, கட்டாயத்திருமணத்தில் அல்லது அதன் அபாயத்தில் உள்ள மக்களுக்கான குடிமக்கள் (சிவில்) பாதுகாப்பு பொறிமுறை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது, கட்டாய திருமணத்திற்காக உருவாக்கப்பட்டிருக்கவில்லை, அத்துடன் முழுஇடத்திலுமுள்ள சட்ட அதிகார வரம்புகள் வேறுபட்டவை.

குறித்த வழியில் மக்கள் அல்லது நிறுவனங்கள் நடந்துகொள்ளவேண்டியதை உறுதிப்படுத்துவதற்கு குடிமக்கள் பாதுகாப்புகள் மற்றும் பரிகாரங்கள் நீதிமன்றினால் வழங்கப்பட்ட சட்டரீதியான பாதுகாப்புகளாகும் தேவைப்படும் மக்களுக்கு உடனடி பாதுகாப்பினை வழங்கி எதிர்கால தீங்கினைத் தடுப்பதை இத்தகைய பாதுகாப்புகள் இலக்காகக்கொண்டுள்ளன.

ஆஸ்திரேலியாவில், கட்டாயத்திருமணத்தைத் தவிர்க்க அல்லது அதிலிருந்து வெளியேறுவதற்கு சட்டரீதியான வழிமுறைகளைக் கட்டாயத்திருமணத்தை எதிர்நோக்கும் மக்களுக்கு வழங்குவதற்கான தேவையை குடிமக்கள் சமூக நிறுவனங்களிலிருந்து வரும் கல்விசார் ஆய்வும், அறிவுரையும் விபரிக்கிறது. குற்ற தண்டனைத்தீர்ப்புக்குத் தேவைப்படும் குற்றத்தை நிரூபிக்கும் தரத்துடன் ஒப்பிடும்போது (நியாயமான சந்தேகத்திற்கு அப்பால்) குடிமக்கள் பாதுகாப்புகள் நிரூபிப்பதற்கு குறைந்தளவு தரம் தேவைப்படும் காரணத்தால் (நிகழவுகளின் சம நிலையில்) சிவில் பாதுகாப்புகள் மேலதிக அம்சங்களை வழங்குவதாக ஆய்வுகள் வாதிடுகின்றன. குடியியல் கட்டளைகள் விரும்பக்கூடிய ஒரு சட்டரீதியான விருப்பத்தெரிவாகும் என ஆய்வுகளும் கருதுகின்றன ஏனெனில், மற்றபடி சிலர் தமது குடும்ப உறுப்பினர்கள் கைதுசெய்யப்பட்டு, வழக்குத்தொடுக்கப்படுவார்களெனப் பயப்படுகிறார்கள்

### *மேம்படுத்தப்பட குடிமக்கள் (சிவில்) பாதுகாப்புகள் மற்றும் பரிகாரங்களை உறுதிசெய்வதற்கான விருப்பதேர்வுகள்*

கட்டாயத்திருமணத்திற்காக, மேம்படுத்தப்பட்ட குடிமக்கள் பாதுகாப்புகள் மற்றும் பரிகாரங்களை உறுதிசெய்வதற்கு விருப்பத்தேர்வுகளை ஆஸ்திரேலிய அரசாங்கம் பரிசீலித்துவருகிறது. இரண்டு விருப்பத்தேர்வுகள் பின்வருவனவற்றுள் அடங்கலாம்:

- **தெரிவு A**: தற்போதிருக்கும் பொது, மாநில மற்றும் பிரதேச குடும்பம் மற்றும் வீட்டு வன்முறை கட்டமைப்புகளை மேம்பட்ட பாதுகாப்பினுள் ஒன்றுசேர்த்தல்.
    - அவர்களுடைய குடும்பம் மற்றும் வீட்டு வன்முறை கட்டமைப்புகளில், தகுந்தமுறையில் ஈடுபாடுகொள்வதற்கு சட்டவரம்புகளுக்காக மேம்படுத்தப்பட்ட பாதுகாப்புகளின் பகிர்ந்துகொள்ளப்பட்ட கொள்கைகள் அல்லது அம்சங்கள் போன்றவற்றை மேம்படுத்துதல் மற்றும் இணங்கிக்கொள்ளவதன் வழியாக இது உள்ளடக்கப்படும்.

தற்போதுள்ள பொது, மாநில, மற்றும் பிரதேச, குடும்ப மற்றும் வீட்டு வன்முறை கட்டமைப்புகளுள், கட்டாயத்திருமணம், குடிமக்கள் பாதுகாப்புகள் மற்றும் பரிகாரங்கள் போன்றவை ஒருங்கிணைக்கப்படுவதை இந்த தெரிவு முன்மொழிகிறது. ஏற்கனவேயுள்ள நிபுணத்துவம் மற்றும் அமைப்புகள் போன்றவற்றின் அடிப்படையில் இந்த அணுகுமுறை உருவாகும். குடும்ப மற்றும் வீட்டு வன்முறை கட்டமைப்புகளுக்கெனச் சகல இடங்களிலுமுள்ள அதிகாரவரம்புகள் வேறுபட்டவை அத்துடன் சில இடங்களிலில் இருக்கும் சட்ட அதிகாரங்கள் கட்டாய திருமணத்திற்குப் பதிலாக குடிமக்கள் பாதுகாப்புகள் கட்டமைப்புகளை கட்டாயத்திருமணத்தினுள் ஒருங்கிணைப்பதற்கு மிகவும் பொருத்தமானதாகும்.

ஏற்கனவேயுள்ள நிபுணத்துவம் மற்றும் கட்டமைப்புகளை அந்நியப்படுத்துதல் மூலம், சிறப்பு தேர்ச்சிபெற்ற நீதிமன்றங்கள் மற்றும் பாதுகாப்புகள் உட்பட விசாலமான ஆதரவு சேவைகளுக்கான வழிகளை நெறிப்படுத்துவதை இந்த விருப்பத்தெரிவு இலக்காகக் கொண்டுள்ளது. இதற்கு ஆதரவளிப்பதற்கு அவசியமான சட்டவரம்புகளைகொண்ட பிற இடங்களுக்கிடையே தகவல்கள்-பகிர்வுசெய்வதுடன், ஆற்றல்மிக்க கல்வி, விழிப்புணர்வு-தூண்டல் மற்றும் திறனைக் கட்டிவளர்ப்பதற்கான முயற்சிகள் போன்றவை இதனை நிறைவேற்றுவதற்கு உதவ அவசியமாகும். தேசிய வீட்டு வன்முறைக் கட்டளைத் திட்டத்தினூடாக (National Domestic Violence Order Scheme) இந்தத் தகவல்-பகிர்வு முயற்சிக்கு ஆதரவளிக்கப்படலாம்.

முதல் தருணத்தில், அவர்களுடைய குடும்ப மற்றும் வீட்டு வன்முறை கட்டமைப்பில் பொருத்தமாக இணைந்துகொள்வதற்கு மேம்படுத்துதல், பகிரப்பட்ட கொள்கைகளுக்கு இணங்குதல் அல்லது சட்டவரம்புகளுக்காக மேம்படுத்தப்பட்ட அம்சங்கள் போன்றவற்றில் சட்ட அதிகாரம் கவனம் செலுத்தலாம். நிறைவேற்றுறலின் நெகிழ்வுத்தன்மையைத் தக்கவைத்துக்கொண்டு, இத்தகைய தேவைகளை கவனிப்பதற்கு, கொள்கைகள் அல்லது அம்சங்களுக்கு இணங்குவதன்மூலம், அரசாங்கங்கள் தேவைகளை நிவர்த்திசெய்ய உறுதிபூண்டிருக்கும். குடும்ப மற்றும் வீட்டு வன்முறை கட்டமைப்புகள் போன்ற ஏற்கனவேயுள்ள பொறிமுறையைப் உபயோகிக்க, புதிய கட்டமைப்புகளை நிறுவ, அல்லது கொள்கைகளை அல்லது அம்சங்களைப் பதித்துவைக்கவும், நிவர்த்திசெய்யவும் வேறு விரும்பிய முறைகளை சட்டஆட்சி வரம்பு தெரிவுசெய்யலாம்.

- **தெரிவு B:** மாநில மாற்றும் பிரதேச அரசாங்க நிறைவேற்று ஆதரவுடன், பொது(காமன்வெல்த்)அரசாங்க சட்டத்தினூடாகப் புதிய பாதுகாப்புகளை நிறுவுதல்

சமத்துவமாகவும் மற்றும் முழு சட்டவரம்புகளுடனும் தேசியரீதியாகச் வித்தியாசமில்லாமல் சீராக பிரயோகிக்கப்படும் சட்டவாக்கத்தை இலக்காகக்கொண்டு, பொது அரசாங்கத்தின் தனியான சட்டம் ஒன்றின் ஊடாக புதிய கட்டாயத்திருமணக் கட்டளை ஒன்றினை நிலைநிறுத்துவதற்கு விருப்பத்தேர்வு B முன்மொழிகிறது.

விருப்பத்தேர்வு A போல, பொது அரசாங்க கட்டளைகள் குறித்து அவற்றை எளிதில் அணுகத்தக்க தன்மை, குறித்தகாலம் தவறாமை மற்றும் செயல்திறன் போன்றவற்றை நிச்சயப்படுத்திக்கொள்ள முழு சட்டவரம்புகளுக்கும் இடையில் இணக்கம் அவசியமாகும். தேசிய நிலையான தன்மையை வழங்கும் அதேநேரம், பாதுகாப்பு மற்றும் ஆதரவு போன்றவற்றைத் தேட பல்வேறு அமைப்புகளை அணுகுமாறு இந்த மாதிரி சட்டம் விண்ணப்பதார்களைக் கேட்கலாம். ஆதலால், இந்த ஆபத்தைக் குறைக்க தெளிவாகப் பரிந்துபேசும் செயல்முறை மற்றும் விழிப்புணர்வு-வளர்ச்சி போன்றன முக்கியமானதாகும். சகல சட்டவரம்பினுள்ளும் ஒருங்கிணைவதை எளிதாக்குவதற்கும், செயல்திறன் வாய்ந்த தகவல் பரிமாற்ற நடைமுறை முக்கிய பங்கு வகிக்கிறது.

## மேம்படுத்தப்பட்ட குடிமக்கள் பாதுகாப்புகளும், பரிகாரங்களும்-முக்கிய அம்சங்கள்

### *கட்டளைகளுக்கான காரணங்கள்*

'கட்டளைகளுக்கான காரணங்கள்' என்பது ஒரு நீதிமன்றம் கட்டளை வழங்க இயலக்கூடியதாக்கும் காரணங்களாகும்; இவை சட்டத்தில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

கட்டாயத்திருமணம் தொடர்பில் குடிமக்கள் பாதுகாப்புகளுக்கான கட்டளைகளுக்கு சாத்தியப்படும் காரணங்கள், நிகழ்வுகளின் சமநிலையில், திருமணம் செய்யுமாறு வற்புறுத்தப்படுவாரெனப் பயப்படுவதற்கு ஒருவருக்குள்ள நியாயமான காரணங்கள் நீதிமன்று திருப்தி கொள்வதற்குள் அடங்கும்.

ஒருவருக்கு, அல்லது ஏனையோருக்குத் தீங்கு ஏற்படுத்துவதாகப் பயமுறுத்தல், கட்டாயத்திருமணத்திற்காக கடல்கடந்து கூட்டிச்செல்லப்போவதற்கான ஆபத்து, அல்லது கட்டாயப்படுத்தும் நடவடிக்கை போன்றவற்றிலிருந்து இந்தக் காரணிகள் உருவாகலாம். உண்மையான அல்லது எதிர்பார்க்கப்பட்ட வன்முறை உள்ளிட்ட மாநில மற்றும் பிரதேச கட்டமைப்புகளில் ஏற்கனவே அமைந்துள்ள காரணிகள் தொடர்புடையதாக இருக்கும்.

### *கட்டளைகளுக்கான வாய்ப்பு*

நாடிச்செல்லக்கூடிய பல்வேறுபட்ட கட்டளைகளை, கட்டளைகளுக்கான வாய்ப்பு கோடிட்டுக்காட்டுகிறது:

- கட்டாயத்திருமணத்தைத் தடுத்தல்
- கட்டாயத்திருமணம் ஒன்றிலிருந்து வெளியேறுவதற்கு ஒருவருக்கு உதவுதல்
- கட்டாயத்திருமணம் தொடர்பில் ஒருவர் அனுபவிக்கும் தீங்கிலிருந்து அவரைப் பாதுகாத்தல்.

பின்வரும் கட்டளைகள் உட்பட மிகவும் பொதுவான மற்றும் குறிப்பிட்ட ஆபத்து மற்றும் முகங்கொடுக்கும் தீங்கு போன்றவற்றை கருத்தில்கொள்ளும் குடிமக்கள் பாதுகாப்புகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும்:

- பாதுகாக்கப்பட்ட நபரை உள்ளடக்கிய ஒரு கட்டாயத்திருமணத்திற்கு வற்புறுத்த, உதவ, அல்லது தூண்டுவதற்கு முயற்சிப்பதிலிருந்து ஒரு பிரதிவாதியைத் தடுத்தல்
- பாதுகாக்கப்பட்ட நபருக்காகக் கடவுச்சீட்டிற்கு விண்ணப்பித்தல், விமானப்பயணத்திற்குப் பதிவுசெய்தல், விவாகப்பதிவாளரை நியமித்தல், அல்லது திருமண விருப்பு அறிவித்தலைப் பூர்த்திசெய்தல் போன்ற பாதுகாக்கப்பட்ட நபருக்காகத் திருமணம் ஒன்றினை ஏற்பாடுசெய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்யவிடாது பிரதிவாதியைத் தடுத்தல்
- வற்புறுத்துதல், வற்புறுத்த முயற்சித்தல், அல்லது ஒரு நபரைக் கட்டாயத்திருமணம் செய்துகொள்ளுமாறு வற்புறுத்துதல் போன்றவற்றிலிருந்து ஒரு பிரதிவாதியைத் தடுத்தல்
- ஆஸ்திரேலியாவிலிருந்து பாதுகாக்கப்பட்ட நபரை அகற்றுவதைத் தடுத்தல்
- விதிவிலக்கான சூழ்நிலைகள் மற்றும் சமப்படுத்தப்பட்ட மனிதஉரிமைகள் பரிசீலனைகளுடன் சர்வதேசரீதியாகப் பயணம் செய்வதிலிருந்து பாதுகாக்கப்பட்ட நபரைத் தடுத்தல்
- விதிவிலக்கான சூழ்நிலைகள் மற்றும் சமப்படுத்தப்பட்ட மனிதஉரிமைகள் பரிசீலனைகளுடன், பாதுகாக்கப்பட்ட நபரின் கடவுச்சீட்டை நீதிமன்றுக்குக் கையளிக்குமாறு வேண்டுதல்
- குறிப்பிட்ட முறையில் பாதுகாக்கப்பட்ட நபர் ஒருவரைத் திருப்பி அனுப்புவதற்கு உதவுமாறு பிரதிவாதியைக் கேட்பது உள்ளடங்கலாக, கட்டாயத்திருமண நோக்கத்திற்காக கடல்கடந்து கொண்டுசெல்லப்பட்ட நபர் ஒருவரைத் திருப்பிஅனுப்புவதற்கு உதவுதல் (ஆஸ்திரேலியாவுக்குத் திரும்ப வருவதற்கு பாதுகாக்கப்பட்ட நபருக்காக விமானப்பயணம் பதிவுசெய்தல் போன்றவை)
- பாதுகாக்கப்பட்ட நபரின் வசிப்பிடத்தை வெளிப்படுத்துமாறு பிரதிவாதியைக் கேட்டல்
- கட்டளையினால் விலக்கப்பட்ட நடத்தையை மேற்கொள்ளுமாறு வேறு ஒரு நபரை பிரதிவாதி வற்புறுத்துதல், உதவுதல் அல்லது தூண்டுதல் போன்றவற்றிலிருந்து தடுத்தல்
- குறித்த செயல்கள் அல்லது அதை ஒத்த தீங்கினைச் செய்வதிலிருந்து பிரதிவாதியைத் தடுத்தல்

*விண்ணப்பதாரர்கள்*

பாதிக்கப்பட்ட-உயிர்பிழைத்தோர் , குடிமக்கள் பாதுகாப்பு கட்டளைகளுக்கு விண்ணப்பிப்பதில் தடைகளைச் சந்திக்கவேண்டிவரலாம் இதை நிவர்த்திசெய்வதற்கு, கட்டாயாத்திருமணத்தில் அல்லது அதன் ஆபத்தில் இருக்கும் நபரின் சார்பாக குடிமக்கள் பாதுகாப்பு கட்டளை ஒன்றிற்காக விண்ணப்பம் மேற்கொள்வதற்கு பல்வேறுபட்ட மக்கள் அனுமதிக்கப்பட இது முன்மொழியப்படுகிறது. சாத்தியமான விண்ணப்பதாரிகளினுள் பின்வருவோர் அடங்குவர்:

- கட்டாயத்திருமணத்தில் அல்லது அதன் ஆபத்தில் இருக்கும் நபர்
- ஒரு பெற்றோர் அல்லது பாதுகாவலர்
- காவல் உத்தியோகத்தர்கள்
- சிறுவர் பாதுகாப்பு முகவர்கள்
- குறிப்பிட்ட சமூக அமைப்புகள், சேவை வழங்குபவர்கள் அத்துடன்/அல்லது பிற அரசு-சார்பற்ற நிறுவனங்கள்
- மற்ற நடவடிக்கைகளின்போது பொருத்தமானதெனக் கருதினால், நீதிமன்றங்களே கட்டளைகளை தொடங்கலாம்.

குடிமக்கள் பாதுகாப்பை நாடுவதற்கு அதிக அணுகக்கூடிய பாதைகளை பரந்த அளவிலான விண்ணப்பதாரர்கள் வழங்கும்போது, பாதிக்கப்பட்டு-உயிர்பிழைத்தவரின் சிறந்த நலன்களுக்காக விண்ணப்பதாரர் செயற்படுகிறாராவென நீதிமன்றம் தீர்மானிப்பதற்கு சிக்கலை உருவாக்குவதுபோன்ற ஆபத்துக்களும் வரலாம்.

*பிரதிவாதிகள்*

எவருக்கெதிராக ஒரு குடிமக்கள் பாதுகாப்பு கட்டளை பிறப்பிக்கப்படுகிறதோ அல்லது குறிப்பிடப்பட்டதோ அந்த நபர் பிரதிவாதியாவார். ஆஸ்திரேலியா முழுவதும் குடிமக்கள் பாதுகாப்பு கட்டளைகள் பிறப்பிக்கப்படுவதற்கான தேவைகள் வேறுபடலாம். எந்தவொரு நபருக்கு எதிராகவும் கட்டளை பிறப்பிக்க ஏனைய கட்டமைப்புகள் நீதிமன்றை அனுமதிக்கும்வேளை, பாதிக்கப்பட்ட-உயிர்பிழைத்தவரின் குடும்ப உறுப்பினர் அல்லது நெருங்கிய துணைவரை நோக்கி கட்டளையை விடுக்குமாறு சில கட்டமைப்புகள் வேண்டுகின்றன.

மேம்படுத்தப்பட்ட கட்டாயத்திருமண குடிமக்கள் பாதுகாப்புகளுக்கு, பின்வரும் சாத்தியமான பிரதிவாதிகள் உள்ளடங்குவர்:

- பெற்றோர் மற்றும் தூரத்து குடும்ப உறுப்பினர்கள் அடங்கலாக, குடும்ப உறுப்பினர்கள்
- கட்டாயத்திருமண ஆபத்தில் இருக்கும் ஒருவர் தான் மணமுடிக்க நோக்கியுள்ள துணைவர்
- மத, கலாசார அல்லது சட்டம்சார்ந்த வைபவங்கள் உட்பட விவாகப்பதிவாளர்கள்,

- வற்புறுத்துதல், வற்புறுத்த முயற்சித்தல், உதவியளித்தல், அல்லது கட்டாயத்திருமணம் ஒன்றிற்குத் துணைபோதல் உட்பட ஒருவரை மணமுடிக்குமாறு வற்புறுத்துவதில் ஈடுபாடுகொண்ட பிற நபர்/நபர்கள்

*பாதிக்கப்பட்ட- உயிர்பிழைத்தவர் முகவர்*

குடிமக்கள் பாதுகாப்பு நடைமுறைகள் முழுவதும் அவர்களுடைய முகவர் மதிக்கப்படுகிறார் என்பதை நிச்சயித்துக்கொள்ள பாதிக்கப்பட்ட- உயிர்பிழைத்தவரின் விருப்பங்களைக் கருத்தில்கொள்வது முக்கியமானதாகும். கட்டளைகளை வெளியிடும்போது பாதுகாக்கப்பட்ட நபரின் விருப்பங்களை ஆலோசிப்பதற்கு முன்மொழியப்பட்ட சட்டஏற்பாடுகள் நீதிமன்றை அனுமதிக்கும்.

பாதுகாப்பு கட்டளைகளை எதிர்க்குமாறு அல்லது கைவிடுமாறு குடும்ப அல்லது சமூக உறுப்பினர்களிடமிருந்து வரும் அழுத்தத்தையும் பாதிக்கப்பட்ட- உயிர்பிழைத்தோர் சந்திக்க நேரிடலாம். இதற்கும் ஆலோசனை தேவைப்படும்ு.

*சட்ட நடவடிக்கைகள் ஊடாக நீதிமன்ற பாதுகாப்புகளும், உதவியும்.*

குடிமக்கள் பாதுகாப்பு கட்டளைகளுக்காக விண்ணப்பிக்கும் பாதிக்கப்படக்கூடியவர்களுக்காக அல்லது குடிமக்கள் பாதுகாப்பு கட்டளைகளுக்காக விண்ணப்பிக்கும் விசேட சாட்சிக்காரர்கள் அடங்கலாக குடும்மப மற்றும் வீட்டு வன்முறை அமைப்புகள் ஊடாக நீதிமன்ற பாதுகாப்புகள் தற்போது கிடைக்கும் அத்துடன் கட்டாயத்திருமணத்தில் அல்லது அதன் ஆபத்தில் இருக்கும் மக்களுக்கு அதே பாதுகாப்புகள் அளிக்கப்படவேண்டுமென முன்மொழியப்படுகிறது.

சாட்சிக்காரர்களைப் பயமுறுத்துதலை நீதிமன்ற பாதுகாப்புகள் தடுப்பதுடன், அவர்களுடைய பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுக்கு உதவும் அத்துடன் பின்வருவனவற்றை உள்ளடக்கும்:

- பாதிக்கப்பட்ட-உயிர்பிழைத்தவர் பிரதிவாதியைப் பார்க்காமல் இருப்பதை உறுதிசெய்வதற்கான ஏற்பாடுகள், உதாரணமாக ஒரு திரையைப் பாவிப்பதன் மூலம் அல்லது ஒலி-ஒளி (audio-visual) இணைப்பினூடாக சாட்சியம் அளிப்பதன்மூலம்
- நீதிமன்றில் உதவியாளரை வைத்திருத்தல்
- மூடப்பட்ட நீதிமன்றினுள் சாட்சியம் வழங்குதல்
- தாமாகவே முன்னிலையாகும் (சுய-பிரதி நிதித்துவம்) பிரதிவாதிகள் குறுக்கு விசாரணை செய்யப்படாமை.

சிவில் பாதுகாப்புகளுக்கு விண்ணப்பிக்கும் கட்டாயத்திருமணத்தில் அல்லது அதன் ஆபத்தில் இருக்கும் மக்களுக்காக ஆதரவை நெறிப்படுத்தவும் பிற சேவைகள் மற்றும் நடவடிக்கைகள் பொருத்தமானதாக இருக்கலாம்.

- முன்னரங்க பதிலளிப்போர், சட்ட உத்தியோகத்தர், நீதிமன்றங்கள் மற்றும் நீதித்துறை போன்றவற்றிற்கான கல்வி மற்றும் விழிப்புணர்வைத் தூண்டும் நடவடிக்கைகள்.
- பாதிக்கப்பட்ட-உயிர்பிழைத்தோருக்கான விண்ணப்பங்களுக்கு உதவுவதற்கான ஆதரவு சேவைகள்
- அரசாங்க நிதியுதவியளிக்கப்பட்ட ஆதரவு சேவைகளுக்கு ஆபத்தில் இருப்பவர்களை பரிந்துரை செய்வதற்கான பாதைகள்.

### *இடைக்கால கட்டளைகளும், ஒரு கட்சிக்காரரின் வழக்கு விசாரணைகளும்*

குடிமக்கள் பாதுகாப்பு (சிவில்) கட்டளைகளுக்காக இடைக்கால மற்றும் ஒருகட்சியினர் கட்டளைகள் அவசிய விசாரணைகளை அனுமதிக்கின்றன. அடுத்த தரப்பினருக்கு அறிவித்தல் கொடுக்கவேண்டியதில்லை மற்றும் பொதுவாக, நீதிமன்ற நடவடிக்கைகள் வழக்கம்போல இடம்பெறும்வரை காலம் வரையறைசெய்யப்பட்டுள்ளது.

பொதுவாக, நீதிமன்றங்கள் இடைக்கால அல்லது ஒருகட்சியினர் கட்டளைகளப் பிறப்பிக்கின்றன. ஆயினும், குறித்த சூழ்நிலைகளில், இடைக்கால, அல்லது ஒருதரப்பினர் கட்டளையை மேற்கொள்ள காவல்துறை உத்தியோகத்தர் போன்றோரை அனுமதிப்பதற்கு சட்டங்கள் வரையப்படலாம். கட்டாயத்திருமணத்தால் பாதிக்கப்பட்ட-உயிர்பிழைத்தோர் தமது பாதுகாப்புக்கு உடனடி ஆபத்தைச் சந்திக்க நேரிடும். ஆதலால், பாதிக்கப்பட்ட-உயிர்பிழைத்தோரின் பாதுகாப்பை நிச்சயப்படுத்திக்கொள்ள, , நீதிமன்றினால் மேற்கொள்ளப்பட்ட இடைக்கால மற்றும்/அல்லது ஒருதரப்பினர் கட்டளைகளைப் பெறக்கூடியதாக இருக்கவேண்டுமென முன்மொழியப்படுகிறது.

### *சேவை, வலியுறுத்தல் மற்றும் மீறல்கள்*

ஆஸ்திரேலியாவில் குடிமக்கள் பாதுகாப்பு கட்டளைகளைக் கொண்டுசென்று கையளிப்பதற்கு காவல் உத்தியோகத்தர்கள் பொதுவாக பொறுப்பானவர்களாவர். கட்டாயத்திருமணம் தொடர்பான குடிமக்கள் பாதுகாப்பு கட்டளைகளையும் காவல்துறையும் வழங்க முன்மொழியப்படுகிறது. பிரதிவாதி கட்டளைகுறித்து அறிந்துகொள்ளும் ஓர் உயர் நிலை உறுதியினை இது வழங்கும். அத்துடன், , அதற்குப் பணிவதையும், பொறுப்புணர்வையும் ஊக்குவிக்கும்; மேலும் பாதுகாக்கப்பட்ட நபரின் பாதுகாப்பிற்கு உத்தரவாதத்தையும் உறுதிப்படுத்தும்.

### *பிற பரிகாரங்கள்*

கட்டாயத்திருமணத்தில் இருப்பவர்களுக்கு இரத்துசெய்யப்படும் நடைமுறைகளை ஒழுங்குபடுத்துவது போன்ற, மேம்படுத்தப்பட்ட கட்டாயத்திருமண குடிமக்கள் பாதுகாப்புகள் மற்றும் பரிகாரங்களை வழங்குவதற்கு ஒரு மாதிரியில் கவனிக்கப்படக்கூடிய ஏனைய பரிகாரங்களும் இருக்கலாம்.

### *ஆபத்து காரணிகள் மற்றும் ஆதரவைத் தேடுவதற்கான தடைகள்*

குறித்த ஒரு கலாசார குழு, மதம் அல்லது இனம் போன்றவற்றிற்கு கட்டாயத்திருமணம் பிரத்தியேகமானதல்ல. ஆயினும், இடப்பெயர்வு, விசா நிலைவரம், மொழித்தடை அல்லது சமூகஆதரவு இல்லாமை போன்ற காரணிகளால் சில சமூகங்கள் அதிக ஆபத்தை எதிர்கொள்ளலாம். உதவியைப் பெற்றுக்கொள்வதில் ஆபத்து உள்ளவர்களுக்கு, பாகுபாடு மற்றும் கலாசார பாதுகாப்பு சேவை இல்லாமை இதைக் கடினமாக்கலாம். இயலாமையுடனான மக்களும் மேலதிக சவால்களை எதிர்கொள்வார்கள். குடும்பம் அல்லது சமூக உறுப்பினர்களுக்கு எதிராகப் தனிப்பட்டவர்கள் பேசுவதைக் குடும்பம் மற்றும் கலாசார அழுத்தங்கள் கடினமாக்கலாம்.

### *சிறுவர்களுக்கு ஆதரவளித்தல்*

மாநில, பிரதேச சிறுவர் பாதுகாப்பு கட்டமைப்புகள் ஊடாகவும், *Family Law Act 1975* (Cth). ஊடாகவும் சிறுவர்களுக்கான தற்போதுள்ள பாதுகாப்புகள் கிடைக்கும் ஆயினும், கட்டாயத்திருமணத்தைத் தவிர்க்கவும், அல்லது வெளியேறவும் விரும்பும் சிறுவர்களுக்குத் தேவைப்படும் குறிப்பிட்ட ஆதரவுக்கும், அணுகல் தேவைகளுக்கும் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும். நீதிமன்ற ஆவணங்களையும், படிவங்களையும் பார்ப்பதற்கு கூடுதல் ஆதரவளிப்பதைக் கவனத்தில் கொள்வது அதேபோல், பொருத்தமான நீதிமன்ற பாதுகாப்புகள் இதற்குள் அடக்கலாம்.

## தீர்மானம்

இந்த ஆலோசனையூடாக வழங்கப்படும் பின்னூட்டம், கட்டாய திருமண பாதுகாப்புகள் மற்றும் பரிகாரங்களை மேம்படுத்த ஒரு மாதிரியை உருவாக்குவதற்கு அனைத்து ஆஸ்திரேலிய அரசாங்கத்தின் பணிகளுக்கும் தெரிவிக்கும். இந்தப் பணி தொடர்ந்தும் இடம்பெறும் என்பதுடன் மேலும் கவனிப்பு மற்றும் சகல சட்டவரம்புகள் மூலம் தீர்மானத்திற்கு உட்படுத்தப்படும்.

உங்களிடம் ஏதேனும் கேள்விகள் அல்லது மேலதிக கருத்துகள் இருந்தால், சட்டமா அதிபர் திணைக்களத்துடன் தொடர்புகொள்ளவதை வரவேற்கிறோம். ForcedMarriage@ag.gov.au.

# ஒருங்கிணைக்கப்பட்ட ஆலோசனை கேள்விகள்

*ஆலோசனைக்கான முன்மொழிவுகள்*

1. கட்டாயத்திருமணத்திற்கு தேசியஅளவில் சீரான பதில்களை மேம்படுத்த இவை பயனுள்ள விருப்பத்தேர்வுகளா? கருத்தில் கொள்ளவேண்டிய பல்வேறு விருப்பத்தேர்வுகள் உள்ளதா?

*பகுதி1: குடும்ப மற்றும் வீட்டு வன்செயல் சேவைகளை, பாதிக்கப்பட்ட-உயிர்பிழைத்தோர் அணுகுவதற்கான வழிகளை மேம்படுத்துவதற்கு,குடும்ப மற்றும் வீட்டு வன்முறையயின் ஒரு வடிவமாகக் கட்டாயத் திருமணம் குறித்த பகிரந்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வுகளைக் கட்டியெழுப்புதல்*

2. கட்டாயத்திருமணம், குடும்ப மற்றும் வீட்டுவன்முறையின் ஒரு வடிவமாக அங்கீகரிக்கப்பட வேண்டுமா? ஏன்?
3. குடும்பம◌் மற்றும் வீட்டு வன்முறையின் ஒரு வடிவமாகக் கட்டாயத்திருமணத்தை திறம்பட அங்கீகரிப்பதற்கு எவ்வித சட்ட, கொள்கை மாற்றங்கள் அல்லது கூடுதல் வழிகாட்டல் தேவை?
4. குடும்ப மற்றும் வீட்டு வன்செயலின் ஒரு வடிவமாக கட்டாயத்திருமணத்தை மிகவும் சீராக அங்கீகரிக்க குடும்ப மற்றும் வீட்டு வன்முறை சேவைகளுக்கு உதவ என்ன மேம்பாடுகள் அல்லது மேலதிக வழிகாட்டல் தேவைபடலாம்.

*பகுதி 2: கல்வி மற்றும் விழிப்புணர்வு-தூண்டுதலை மேம்படுத்துதல்*

5. கல்வி அல்லது விழிப்புணர்வு-தூண்டும் நடவடிக்கைகள் என்ன தலைப்புகளின் கவனம் செலுத்தலாம்
6. கட்டாயத்திருமணத்தால் பாதிக்கப்பட்ட சமூகதில் கல்வி மற்றும் விழிப்புணர்வைத் தூண்டுவதில் யார் ஈடுபடவேண்டும்?
7. சமூகத்தில் கல்வி மற்றும் அதிகரிக்கப்பட்ட கட்டாயத்திருமணம் குறித்த விழிப்புணர்வு தேவைப்படும் குழுக்கள் எவை (உதாரணமாக, காவல்துறை போன்ற முன்னணி பணியாளர்கள், சிறுவர் பாதுகாப்பு மற்றும்/அல்லது சமூகத்தில் இருக்கும் குறிப்பிட்ட கூட்டாளிகள்)

*பகுதி3: குடிமக்கள் பாதுகாப்பு மற்றும் பரிகாரங்களை வலுப்படுத்துதல்*

*பின்னூட்டத்திற்கான முன்மொழிவு*

8. ஆஸ்திரேலியாவில் கட்டாயத்திருமணத்திற்குப் பதிலளிக்கவும், தவிர்க்கவும் கிடைக்கும் தற்போதுள்ள சட்ட பாதுகாப்புகளில் இடைவெளிகள் இருப்பதாக நீங்கள் நினைக்கிறீர்களா? அப்படியானால், அத்தகைய இடைவெளிகள் என்ன, அவற்றிற்கு தேசிய பதில் தேவையா?
9. குடிமக்கள் சட்ட பாதுகாப்புகளை வலுப்படுத்துவதற்கு இரண்டு விருப்பத்தேர்வுகளை இந்தக் கட்டுரை விவாதிக்கிறது: விருப்பத்தேர்வு A (தற்போதய சட்டத்தை மேம்படுத்தவும் ஒருவேளை பகிரப்பட்ட

கொள்கைகளூடாக), விருப்பத்தேர்வு B(தனியான பொதுச்சட்டத்தை அறிமுகப்படுத்துங்கள்). இந்த இரண்டு செயலாக்க விருப்பத்தேர்வுகளில் எது மிகவும் பயனுள்ளது, ஏன்? முக்கிய ஆபத்துகள் என்ன? கருத்தில் கொள்ள வேண்டிய வேறு விருப்பத்தேர்வுகள் உள்ளனவா?

10. விருப்பத்தேர்வு A இன் கீழ் குடும்பம் மற்றும் குடும்ப வன்முறை கட்டமைப்புகளுக்கு மாற்றாக குடிமக்கள் பாதுகாப்பு கட்டமைப்புகள் உள்ளன, அவை கட்டாய திருமண குடிமக்கள் பாதுகாப்பை வலுப்படுத்த பயன்படுத்தப்படுமா?

### *கட்டளைகளுக்கான காரணங்கள்*

11. கட்டாயத்திருமணத்திற்காக குடிமக்கள் பாதுகாப்பு கட்டளையை நாடுவதற்கான காரணங்களாக கட்டாயத்திருமணத்துடன் இணைக்கப்பட்ட என்ன சான்று அல்லது வேறுவிதமான நடவடிக்கைகள், ஆபத்துகள் அல்லது தீங்குகள் கவனத்தில் கொள்ளப்படவேண்டும்?

*கட்டளைகளுக்கான வாய்ப்பு*

12. சிறுவர்கள் உட்பட, கட்டாயத்திருமணத்தில் அல்லது அதன் அபாயத்தில் இருக்கும் ஆட்கள் முகம்கொடுக்கும் மிகவும் பொதுவான மற்றும் குறிப்பிட்ட ஆபத்துகள் மற்றும் தீங்குகளை மேலே அட்டவணைப்படுத்தப்பட்ட முன்மொழியப்பட்ட பாதுகாப்புகள் நிவர்த்திசெய்கின்றனவா? இல்லை எனில், வேறு எதனை கருத்தில்கொள்ளவேண்டும்?
13. ஆலோசிக்கப்படவேண்டிய பிரேரிக்கப்பட்ட பாதுகாப்புகள் குறித்து வேறு ஏதேனும் ஆபத்துகள் அல்லது எண்ணப்படாத பின்விளைவுகள் இருக்கின்றனவா?

*விண்ணப்பதாரர்கள்*

14. கட்டாயத்திருமணத்திற்கான குடிமக்கள் பாதுகாப்பு கட்டளை ஒன்றிற்கு விண்ணப்பிக்கக்கூடிய கூடுதலான மக்கள் அல்லது நிறுவனங்கள் ஏதேனும் இருக்கின்றனவா? ஆம் எனில், யார், ஏன்?
15. பாதுகாப்பு கட்டளை ஒன்றிற்கு விண்ணப்பிப்பதற்கான திறனைக் குறிப்பிட்ட தனிப்பட்டோர் அல்லது நிறுவனங்களுக்குக் வழங்குவதில் ஆபத்துகள் இணைந்து உள்ளதா? அவ்வாறானால், இத்தகைய ஆபத்துக்கள் யாவை; எவ்வாறு அவற்றைக் குறைக்கலாம்?

*பிரதிவாதிகள்*

16. கட்டாயத்திருமண குடிமக்கள் பாதுகாப்புகளுக்கு யார் பிரதிவாதியாக இருக்கவேண்டுமென்பதில் ஏதேனும் வரம்புகள் இருக்கின்றனவா? அவ்வாறானால், எவ்வாறு அவை வரையறைசெய்யப்படவேண்டும் (உதாரணம்: குடும்ப அங்கத்தவர்கள் மாத்திரம்)?

*பாதிக்கப்பட்ட- உயிர்பிழைத்தவர் முகவர்*

17. கட்டளைகளைக் கைவிடுமாறு பாதிக்கப்பட்ட-உயிர்பிழைத்தோர் வற்புறுத்தப்படும் ஆபத்தினை எவ்வாறு நிவர்த்திசெய்வது?
18. கட்டாயத் திருமண விசாரணைகள் மற்றும் குடிமக்கள் பாதுகாப்பு (சிவில்) கட்டளைகளை வெளியிடுவதற்கான செயல்முறைக்குள் சிறுவர்கள் உட்பட, பாதிக்கப்பட்ட- உயிர்பிழைத்தோரின் கருத்துகளை எவ்வாறு சிறந்த முறையில் தேடி இணைக்கலாம்?

*சட்ட நடவடிக்கைகள் ஊடாக நீதிமன்ற பாதுகாப்புகளும், உதவியும்.*

19. சிறுவர்கள் உட்பட, குடிமக்கள் பாதுகாப்பு கட்டளை விண்ணப்ப செயல்முறை ஊடாக உதவுவதற்கு, கட்டாயத்திருமணத்தில் அல்லது அதன் ஆபத்தில் இருக்கும் மக்களுக்கு, வேறு எவ்வித ஆதரவுகள் கட்டாயமாகக் கிடைக்கவேண்டும்? உதாரணமாக, விண்ணப்ப நடைமுறை அல்லது மேலதிக நீதிமன்ற பாதுகாப்பு ஊடாக மேலதிக ஆதரவுகள்

*இடைக்கால கட்டளைகள் மற்றும் ஒருதரப்பினர் வழக்குவிசாரணைகள்*

20. கட்டாயத்திருமணத்தில் அல்லது அதன் ஆபத்தில் ஒருவர் இருக்கும்போது, இடைக்கால கட்டளையைப் பிறப்பிப்பதற்கு எவ்வித காரணங்கள் பொருத்தமாகும்?

21. முன்மொழியப்பட்ட கட்டளைகளின் நோக்கம் சிலவற்றை, ஆனால் முழுவதுமல்ல, உள்ளடக்குவதற்கு இடைக்கால கட்டளைகள் மட்டுப்படுத்தப்பட வேண்டுமா (கட்டளைகளின் நோக்கத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது)? அவ்வாறானால், எத்தகைய பாதுகாப்புகள் சேர்க்கப்படவேண்டும் அல்லது விலக்கப்படவேண்டும் அத்துடன் ஏன்?

22. கட்டாயத்திருமணத்தில் அல்லது அதன் அபாயத்தில் ஒருவர் இருக்கும் வேளையில், இடைக்கால கட்டளை ஒன்றிற்காக காரணங்களைக் கவனித்தில் கொள்ளும்போது கட்டாயத்திருமணதின் ஆபத்தை என்னவகையான சான்றுகள் சுட்டிக்காட்டலாம் அத்துடன் காவல்துறையால் கருதப்படலாம்?

*சேவை, அமுல்படுத்துதல் மற்றும் மீறல்கள்*

23. கட்டளைகள் தனிப்பட்ட முறையில் கையளிக்கப்படத்தேவைப்படாத ஏதேனும் சந்தர்பங்கள் இருக்கின்றனவா (உதாரணமாக இலத்திரனியல் சேவையூடாக)? அவ்வாறானால், அத்தகைய சந்தர்ப்பங்கள் யாவை?

*பிற பரிகாரங்கள்*

24. குடிமக்கள் (சிவில்) பாதுகாப்புகளுக்கு மேலாக, கட்டாயத்திருமணத்தில் அல்லது அதன் ஆபத்தில் இருக்கும் மக்களுக்கு கவனிக்கப்படவேண்டிய பரிகாரம் இருக்கிறதா?

25. தற்போது, பாதிக்கப்பட்ட- உயிர்பிழைத்தோரின் கட்டாயத்திருமணம் தொடர்பாக, செல்லுபடியற்றதாக்கும் பிரகடனம் ஒன்றினைக் கேட்கும்போது, அவர்கள் தடைகள் அல்லது சிரமங்களை எதிர்நோக்குகிறார்களா? ஆம் எனில், இத்தகைய தடைகள் அல்லது சிரமங்கள் எவ்வாறு நிவர்த்திசெய்யப்படலாம்?

*ஆதரவு தேடுவதற்கு இருக்கும் ஆபத்து காரணிகளும் தடைகளும்*

26. கட்டாயத்திருமணத்தில் அல்லது அதன் ஆபத்தில் இருக்கும் மக்கள் ஆதரவு தேடுவதில் இருக்கும் ஆபத்துகள் மற்றும் தடைகள் என்ன? இவற்றை நிவர்த்திசெய்ய எவ்வித உபாயங்களைக் கருத்தில்கொள்ளலாம்?

27. ஒருவர் சட்ட அமைப்பினூடாகப் பாதுகாப்பை நாடினால், அவர் எவ்வித ஆபத்துகள் மற்றும் தடைகளைச் சந்திக்க நேரிடலாம்? எவ்வாறு இதற்கான தண்டனையைக் குறைக்கலாம்?

28. ஆதரவுசேவை மற்றும் சட்டஅமைப்புகளுடன் ஈடுபடுவது, கட்டாயத்திருமணத்தை எதிர் நோக்கும் ஆட்களுக்கு ஆபத்தை அதிகரிக்கும். ஒரு நபர் கட்டாயத்திருமணத்தின் ஆபத்தில் இருக்கும்போது, முன்னரங்க பதிலளிப்போர் அல்லது சட்ட சேவைகள் போன்றவற்றால் பொறுப்பேற்கக்கூடாத வேறு ஏதாவது செயல்கள் உள்ளனவா?

*சிறுவர்களுக்கு ஆதரவளித்தல்*

29. முன்மொழியப்பட்ட சட்ட பாதுகாப்புகளை அணுகுவதற்கும் மற்றும் விண்ணப்பங்கள், , நீதிமன்று மற்றும் வேறு சட்ட நடைமுறைகளூடாக

சிறுவர்களுக்கு உதவுவதற்கும் எவ்வித மேலதிக ஆதரவுகள் மற்றும் பாதுகாப்புகள் ஆலோசிக்கப்படலாம்?